பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

தேசியக் கருத்தரங்கம்

# தமிழிலக்கியத்தில் அறம்

22.02.2017

ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு



முதுகலைத் தமிழ்த்துறை


ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

DST FIST Supported College

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழிலக்கியத்தில் அறம் (ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு) |
| ISBN | : | 978-81-923121-1-8 |
| பொருள் | : | தமிழிலக்கியத்தில் அறம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் |
| ஆசிரியர் | : | முதுகலைத் தமிழ்த்துறை |
| ஆண்டு | : | பிப்ரவரி 2017 |
| வெளியீடு | : | முதுகலைத் தமிழ்த்துறை<br>ஜெ.அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரி<br>பெரியகுளம்<br>தேனி மாவட்டம் |
| பக்கம் | : | XVI + 248 |
| வடிவமைப்பு & அச்சாக்கம் | : | அக்கா அச்சகம்<br>ஜெ. அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரி வளாகம், பெரியகுளம், தேனி மாவட்டம் |

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | **சங்க இலக்கியங்களில் அறம்**<br>முனைவர் க. நாகநந்தினி | 1 |
| 2. | **தமிழிலக்கியத்தில் அறம்**<br>வே. மீனா | 6 |
| 3. | **இலக்கியத்தில் அறம்**<br>செல்வி ர.தெரசா | 15 |
| 4. | **இலக்கியங்களில் அறம்**<br>செல்வி மு.அருணாதேவி | 21 |
| 5. | **இலக்கியங்களில் அறம்**<br>செல்வி. பா. விமலா | 26 |
| 6. | **இலக்கியத்தில் வாழ்வியல் அறம்**<br>செல்வி.து.கீர்த்தனா | 30 |
| 7. | **சங்க காலப் பாணர்களின் வாழ்வியல் அறம்**<br>சி. அர்ச்சனா | 34 |
| 8. | **கலித்தொகை காட்டும் அறம் (குறிஞ்சிக்கலியை முன் வைத்து)**<br>முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி | 40 |
| 9. | **பொன்னறங்கள் பொலியும் புறநானூறு**<br>முனைவர். அ. ஜான்சி மேரி | 46 |
| 10. | **புறநானூற்றில் வாழ்வியல் விழுமியங்கள்**<br>வி. கவிதா | 51 |
| 11. | **நாலடியார் கூறும் அறம்**<br>செல்வி மா.சியாமளா | 56 |
| 12. | **இனியவை நாற்பதில் அறம்**<br>செல்வி த.தனலட்சுமி | 60 |
| 13. | **சிறுபஞ்சமூலம் காட்டும் அறம்**<br>முனைவர் திருமதி க.சகாய கிரேஸி | 64 |
| 14. | **உலகப் பொதுமறை உணர்த்தும் அறம்**<br>திருமதி.சு.பிரியாவிக்னேஷ்குமார் | 69 |
| 15. | **குறள் கூறும் அறக் கருத்துக்கள்**<br>செல்வி ரா.கௌசல்யா | 73 |

# 8. கலித்தொகை காட்டும் அறம் (குறிஞ்சிக்கலியை முன் வைத்து)

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)
மதுரை - 625 018
அலைபேசி: 9751488492 மின்னஞ்சல் adonispeo @ gamail.com

**நோக்கம்**

**“அறமே அறிவு, அறிவே அறம்”** என்கிறார் கிரேக்கத் தத்துவஞானி சாக்ரடீஸ். **“அறமெனப் படுவது யாதெனக் கேட்பின் மறவாது இதுகேள் மண்ணுயிர்க்கெல்லாம் உண்டியும் உறையுளும் அல்லது கண்டதில்”** என்கிறது மணிமேகலை. **“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”** எனக் கூறுகிறது புறநானூறு. **“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்”** என்கிறது திருக்குறள். மனித வாழ்க்கை செம்மையுடையதாகவும் பயனுடையதாகவும் அமைவதற்கு ஆன்றோர்கள் காட்டிய அன்றாட வாழ்க்கையில் பின்பற்றப்படுவதற்குரிய மெய்ம்மை நெறி அறம் ஆகும் என்கிறார் கு.பகவதி. மனித இனத்தின் நலத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறம் எனப்படும்.

‘அறம்’ என்னும் சொல்லிற்கு ‘அறுத்துச் செல்வது’, ‘வழியை உண்டாக்குவது’ என்பன நேரான பொருளாகும். அறம் என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனித அறிவு வளர்ச்சிக்கான பண்பட்ட நிலையின் வெளிப்பாடாக அறம் அமைகிறது. எதிர்வினைகள் மக்களை ஆழ்த்தும்போது அதிலிருந்து மீள மனித சமூகத்தால் படைக்கப்பட்ட எச்சரிக்கை உணர்வே அறம் எனப்படுகிறது. இந்த அறமரபின் வளர்ச்சிப் பாங்கானது இலக்கியத் தளத்தில் ஆதிக்கம் பெற்று வளர்ந்துள்ளது. இலக்கியங்கள் காலந்தோறும் அறக்கருத்தாக்கங்களால் படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு படைக்கப்பட்டுள்ள இலக்கியங்களுள் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையும் ஒன்றாகும். இக்கலித்தொகையில் இடம்பெற்றுள்ள குறிஞ்சிக்கலி காட்டும் அறம் குறித்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.